# தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகம்
**நாகப்பட்டினம் - 611 001**

**பத்திரிக்கைச் செய்தி**

## 2017-2018 ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு

தமிழ்நாடுமீன்வளப் பல்கலைக்கழகத்தின் 2017-18 ஆம் ஆண்டுக்கான இளநிலை மீன்வள அறிவியல் பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு பொன்னேரி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 29.07.2017 அன்று நடைபெற்றது. இக்கலந்தாய்வில், 350 மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். மொத்தம் உள்ள 112 இடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டன.

இளநிலை மீன்வளப் பொறியியல் பட்டப்படிப்பிற்கான மாணவர் சேர்க்கை கலந்தாய்வு 30.07.2017 அன்று நடைபெற்றது. இக்கலந்தாய்வில், 50 மாணவர்கள் கலந்துகொண்டனர். இப்பட்டப்படிப்பிற்கான மொத்தம் உள்ள 20 இடங்கள் அனைத்தும் நிரப்பப்பட்டன. மேலும், வெளிநாட்டுவாழ் இந்தியர்களுக்கான இடஒதுக்கீட்டின் கீழ் 12மாணவர்கள் சேர்க்கப்பட்டனர்.

பல்கலைக்கழக இணைவேந்தர் மற்றும் மீன்வளம், நிதி, ஊழியர், நிர்வாக சீர்திருத்தத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு.D.ஜெயக்குமார் அவர்கள் மாணவர்களுக்கான சேர்க்கை ஆணையை ஜீலை30ம் தேதியன்று வழங்கினார். பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. சிறுணியம் பலராமன், அவர்கள் உடனிருந்தார்.

இதில் தமிழ்நாடு மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் சுக..ஃ.பெலிக்ஸ் அவர்கள், பதிவாளர் (பொ) முனைவர் கு.ரத்னகுமார், மாணவர் சேர்க்கைக் குழுதலைவர் மற்றும் தேர்வுகட்டுப்பாட்டு அலுவலர் முனைவர். சீ.அ.சண்முகம் மற்றும் கல்லூரிகளின் முதல்வர்கள் உடனிருந்தனர்.